# தனியார் வீட்டு விலைகள் பிப்ரவரியில் 0.3% சரிவு

தனியார் மறுவிற்பனை வீட்டு விலைகள் பிப்ரவரியில் முந்தைய மாதத்தை ஒப்பிடுகையில் 0.3 விழுக்காடு சரிந்தன. ஜனவரியில் அது 0.1 விழுக்காடு என்று சற்று இறங்கி இருந்ததாக 'என்யுஎஸ்' சிங்கப்பூர் வீட்டு விலை குறியீட்டின் முன்னுரைப்புகள் நேற்று காட்டின.

சிறிய வீடுகளைத் தவிர்த்து, மத்திய வட்டாரத்தில் வீட்டு விலைகள் மாத அடிப்படையில் 1 விழுக்காடு குறைந்தன. அது முந்தைய மாதத்தில் 0.5 விழுக்காடு உயர்ந்து இருந்தது.

மறுபுறம், பிற வட்டாரங்களில் வீட்டு விலைகள் 0.3 விழுக்காடு ஏறி இருந்தன. அவை முன்னதாக 0.6 விழுக்காடு இறங்கி இருந்தன.

506 சதுர அடி அல்லது அதற்கு குறைவான பரப்பளவு கொண்டிருக்கும் சிறிய வீடுகளின் விலைகள் 0.6 விழுக்காடு குறைந்தன. ஜனவரியில் வீட்டு விலைகள் 0.1 விழுக்காடு உயர்ந்து இருந்ததாக சிங்கப்பூர் வீட்டு விலை குறியீடு காட்டியது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.